4

# துஹ்றபத்துல் மூமிநீன்.

இஃது

நாகூர் ஷரீபு குத்துபுல் மஜீது ஷாகுல் ஹமீது
ஆண்டவரவர்கள் தர்கா ஷரீபின்
ஆதீனஸ்தர்களில் ஒருவரும்
மார்க்க ஊழியருமாகிய

மௌலானா மவுலவி காதிமுஷ்ஷராயி காலி
அஸ்ஸெய்யது றஹ்மத்துல்லா சாஹிபு
அல்காதிரிய்யி அவர்களால்
இயற்றப்பெற்றது.

---

நாகூர் முகம்மது அலி மரைக்காயரவர்களால்
வெளியிடப்பட்டது.

---

1929.

...ஸ், நாகபட்டணம்.

O7:414
N29
170757

# துஹ்பத்துல் மூமினீன்.

இஃது

நாகூர் ஷரீபு குத்துபுல் மஜீது ஷாகுல் ஹமீது
ஆண்டவரவர்கள் தர்கா ஷரீபின்
ஆதீனஸ்தர்களில் ஒருவரும்
மார்க்க ஊழியருமாகிய

மௌலானா மவுலவி காதிமுஷ்ஷராயி காலி
அஸ்ஸெய்யது றஹ்மத்துல்லா சாஹிபு
அல்காதிரிய்யி அவர்களால்
இயற்றப்பெற்றது.

---

நாகூர் முகம்மது அலி மரைக்காயரவர்களால்
வெளியிடப்பட்டது.

1929.

அகஸ்தியர் பிரஸ், நாகபட்டணம்.

# துஹ்பத்துல் மூமிநீன்.

## பிஸ்மில்லாஹி.

### ஹம்து சலவாத்துக்குப் பின்பு சகலமான முஸ்லீம் சகோதரர்களுக்கு முக்கியமான அறிவிப்பு.

துஹ்பத்துல் முமீநின் என்ற இந்த கிரந்தத்தில் நமது மார்க்க சட்டப்படி தொழுகையிலுள்ள அவசியமான சில ஹுகும்களை நமது சகோதரர்களாகிய முஸ்லிம் சகோதரர்கள் தவராமல் நடந்துவரும் பொருட்டு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

1. நபிகள்நாயகம் அலைஹிஸ்ஸலாத்துஒஸ்ஸலாம் அவர்கள் உள்பட அல்லாகுத்த ஆலாவினால் அடியார்களுக்கு அறிவிக்கும்படி கொண்டுவந்த மார்க்ககட்டளைகளையும் ஈமான் இஸ்லாமுடைய கொள்கைகளையும் வெளிப்படுத்துவதுடனே ஒவ்வொருவரும் மரணமடைகிற வரையிலும் தவராமல் நடத்திவர கட்டளைசெய்யப்பட்டது சிறப்பான இந்த ஐந்து ஒகுத்து தொழுகையாக இருக்கும். நமது பரிசுத்தமான இஸ்லாம் மார்க்கத்தில் ஐந்துஒகுத்திலும பொடுபோக்காய் இமாம் ஜமாஅத்துடன் தொழுகையை விடாது தொழுதுவரும் பொருட்டு தெரிவிக்கப்பட்டது.

௨. தொழுகையின் வரிசைகளையும் அவ்வற்றப்
பலன்களையும், உண்மையான ரகசியங்களையும், இதில்
சுருக்கமாகச் சொல்லப்படுகின்றது. எல்லா நபிமார்
களுக்கும், ஏற்றமாகவும், ஆகிர் நபியாகவும், பாவிகளு
க்கு மன்றாடும்படியான ஷபீஉல் முத்நபீனாகவுமுள்ள
நமது நபிகள் நாயகம் முகம்மது முஸ்தபா றசூல்
ஸல்லல்லாகு அலைஹி வஸல்லம் ஆண்டவரவர்களும்,
அவர்களின் ஷஹாபாக்களும், அவர்களைப் பின்பற்றிய
தாபியீன்கள் முதலான இமாம்களும், குதுபு ஜமா
னும் அல்லாகுத்த ஆலாவை நிறப்பமாக அறிந்த ஆரி
புகளும் அல்லாகுத்த ஆலாவின் வணக்கத்தில் பறுவு
டைய மகிமையையும் தவுஹீதின் தீர்மானத்தையும்
பெற்றோர்கள் முதலிய கியாமநாள் வருகிற வரையில்
உண்டாகிற ஒவ்வொரு ஒலிமார்கள் மூமீன்களான
ஆண் பெண் அனைவோர்கள் பேரிலும் அல்லாகுத்த
ஆலா றசூல் சல்லல்லாகு அலைஹிவஸல்லம் அவர்கள்
மூலியமாய் தீனுல் இஸ்லாம் மார்க்கத்தில் கட்டளை
யிட்ட பகிரங்கமான இந்த ஐந்து ஒகுத்து தொழுகை
யை ஒவ்வொருவர்களுடைய மவுத்து வரையிலும் ரகசி
யத்திலும் பருசியத்திலும் விடாமல் தொழுது வரும்படி
கடமையாக்கப்பட்டிருக்கிறது. மேற்சொன்ன ஒவ்
வொருவர்கள் மீதிலும் ரகசியத்திலும் பருசியத்திலும்
இந்த தொழுகையின் கடமை நீங்கமாட்டாது. (தொழு
கை என்பது) அல்லாகுத்த ஆலாவுடைய பூரணமான
உகப்பும் கிருபையும் நிறைந்ததும் நபிமார்கள் இடை
விடாமல் நடத்திவந்த நடையாகவும் செயலாகவும் மலக்
குகளின் வணக்கங்களாயும் உகப்புள்ளதாயும் அல்லா
வுடைய அரிபாவென்னும் தெளிவான ஞானத்தைப்
பெற்றுக்கொள்கிறதற்கு ஒளிவாகவும் ஈமானை உறுதிப்
படுத்தி தரிப்படுத்திவைக்கிற அஸ்திவாரமாகவும் தொழு
கையில் கேட்கிற துஆக்கள் சந்தேகமின்றியே அல்லா
குத்த ஆலாவிடத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டதாயும்
ஷெய்தானுக்கு கோபமாயும் தொழுதவந்தவர்களின்
ரூஹை சக்கறாத்துடைய ஹாலில் இலேசாககிருபையு

டன் கைப்பற்ற வேண்டுமென்றும் மலக்குல் மவுத்து அலைஹிஸ்ஸலாமிடத்தில் சிபார்சு பண்ணுகிறதாயும் இந்த தொழுகையையுடையவர்களுக்கு கபரில் இருளை நீக்கிவெளிச்சத்தைக் கொடுக்கும்படியான விளக்காகவும்கபரில் படுக்கிற விரிப்பாகவும் முன்கர்நகீர் அலைஹிஸ்ஸலாமுடைய கேள்விக்கு தடுமாறாமல் ஜவாபுசொல்லவும் கியாமம் வரையிலும் கபரில் தனித்திருக்கிற பயங்கரத்தை நீக்கி மருகுதலாகிய துணையாகவுமிருக்கும். கியாமத்தில் ஹசருடைய மைதானில் வெய்யில்காங்கை அடிக்காமல் நிழலாகவும் தலைக்கு தாஜ என்னும்தொப்பியாகவும்உடுமானமாகவும்இருளானவிடங்களில் நடந்துபோக வெளிச்சமாகவும் அல்லாகுத்த ஆலாவிடத்தில் கேள்விக்குப் பதில்சொல்ல உதவியாகவும் நன்மை தீமையை நிறுக்கிற மீஜான் நிராசில் நன்மை தட்டை கனமாக்கி வைக்கிறதாகவும் சிருத்தென்னும் பாலத்தில் மின்வெட்டி மறைவதுபோல் விரைவாக நடத்தி வைக்கிறதாகவும் சுவர்க்கலோகத்திற்கு திறவுகோலாகவும் உள்ள இந்த பிரயோஜனங்களான வருசைகளெல்லாம் இந்த ஐந்து ஒகுத்து தொழுகையில் உண்டென்பதில் சந்தேகமில்லை. இந்தத் தொழுகையானது அல்லாகுத்த ஆலாவுடைய நாயகத்தனத்தையும் நமது அடிமைத்தனத்தையும் திட்டமாக வெளிப்படுத்துகிற வணக்கமாகவிருக்கிறது. ஆகையினால் ஒவ்வொரு நாளைக்கும் கட்டளைசெய்த 5 ஒகுத்துக்குள்ளாக தவறாமல் தொழுதுவருகிறதானது எல்லா வணக்கங்களினின்றும் யேத்தமாகவே இருக்கின்றது. ஒருவன் இமாம் ஜமா அத்துடனே தொழுது வருவானேயானால் அவனுக்கு அடியிற்காண்கிற ஐந்து விஷயங்களைக் கொடுப்பான் என்பதிற் சந்தேகமில்லை.

அவைகளாவன:—

(1) கால ஜீவனத்துடைய மிடுமையையும் கஷ்ட நிலைமையையும் நீக்கிவைப்பான்.

(2) கபருடைய அதாபை எளிதாக்குவான்.

(3) கியாமத்து நாளில் நன்மையுடைய பட்டோ லையை வலது கையில் கொடுப்பான்.

(4) சிறாத்து என்னும் பாலத்தில் மின்வெட்டி மறைவதுபோல் நடத்திவைப்பான்.

(5) சுவர்க்க லோகத்தில் கேள்வி கணக்கின்றியே புகுத்துவான்.

ஆக இந்த ஐந்து விஷயமும் அல்லாகுத்த ஆலா மேல்கண்ட ஐந்துஒகுத்து தொழுகையையும் தவறாமல் தொழுதுவந்தவர்களுக்குக் கொடுப்பானென்று நபிகள் நாயகம் சல்லல்லாகு அலைஹி வசல்லம் ஆண்டவர்கள் திருவாய்மலர்ந்திருக்கிறார்கள். யாதொருவன் இமாம் ஜமாஅத்துடன் இந்த ஐந்து ஒகுத்து தொழுகையையும் தொழுகாமல் பொடுபோக்காக விட்டுவிடுவானேயாமாகில் அவனுக்கு அல்லாகுத்த ஆலா 12 விதமான வேதனைகள் செய்வான். அதில் 3 துனியாவிலும் 3 மவுத்தாகிற இடத்திலும், 3 கபரிலும், 3 கியாமத்திலும். துனியாவிலுள்ளதில் 1 வியாபாரங்களில் லாபம் வளர்ந்தேறி வருகிற பறக்கத்தை எடுத்துவிடுவான். 2 மற்றெந்த அமல்களையும் அல்லாகுத்த ஆலா ஒப்புக்கொள்ளமாட்டான். 3 கைறான முகத்துடைய அழகையும், ஒளிவையும், எடுத்து விடுவான் இவன் பேரில் எல்லா மூமின்களும் கோபமாகும்படி செய்வான். மவுத்தாகிற இடத்தில் 1 மவுத்தாகிற தருணத்தில் ரூஹை தவனத்துடன் கைப்பற்றப்படும். 2 கடுமையான வருத்தத்துடனே ரூஹை கைபற்றப்படும். 3 ஈமான் நீங்கிப்போகிறதற்கு காரணமாயிருக்கும். கபரிலுள்ளதில் 1 முன்காநகீர் அலைஹிஸ்ஸலாம் கடுமையான சுவால் கேட்கிறது. 2 கபரில் இருள் அதிகமாகயிருக்கிறது. 3 கபரில் ஒரு விலா எலும்பு மறுவிலாபுரம் பிதுங்கும்படி கடுமையான நெருக்கமுண்டாகிறது. கியாமத்திலுள்ளதில் 1 கேள்விகணக்கு ரொம்பவும் கடுமையாகவும். 2 அல்லாகுத்த ஆலாவுடைய கோபம் கடுமையாகவும். 3 நரகத்தில் வேதனை செய்யப்

படுகிறது மிகக்கடுமையாகவுமிருக்கும். இந்தப்படி கன்சுல் அக்பார்-தன்பீஹுல்காபிலீன் - துற்றதுன் நாசிஹீன் யென்னும் கிரந்தங்கள் கூறுகிறது.

தொழுகை என்பது ஈமான் உள்ளவன் என்கிறதை வெளியாக்குகிற அடையாளமாகவிருக்கும். தொழுகையாகிறது தீனுக்குத் துணையிருக்கும் தொழுகையை நேமமாகத் தொழுதுவந்தவன் தீனை நிலைநிறுத்தாட்டி வைத்தவனுகயிருப்பான். தொழுகையை விட்டுவிட்டவன் தீனை இடித்துவிட்டவனுகிவிடுவான். ஒழுவில்லாதவனுக்கு தொழுகையில்லை. தொழுகை இல்லாதவனுக்கு ஈமானில்லை. தொழுகாதவன் கியாமத்து நாளையில் காரூன்-பிரவூன்-ஹாமான்-உபையிபுனு கலபு இவர்களுடன் எழுப்பப்படுவான். இமாம் ஜமாஅத்துடன் தொழுகாமல் தொழுகையை விட்டவன் தவுறுத்து இஞ்சீல் ஜபூர் புருகான் இந்த நாலு வேதத்திலும் லஅநத்து செய்யப்பட்டவன் என்றும், இன்னும் தொழுகையை விட்டவனுடைய கெடுதலானது அடுத்த வீட்டுக்காரர்களிலும் குடும்பத்தார்களிலும் 70 பேர்களுக்குசேருகிறது. தொழுதுவருகிறவர்கள் அத்தஹிய்யாத்து ஓதிவரும் காலமெல்லாம் அதின் தவாபுகளானது ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காலம் முதல் தொழுகிறவர்களுடைய காலம் வரையிலுமுள்ள முமீன்களில் நின்றும் மவுத்தானவர்களுக்கு சேருகிறது. அப்படி தொழுகாமல் தொழுகையை விட்டவன் மேல்கண்ட தவாபுகளை முஸ்லீம்களுக்கு சேரவிடாமல் தடுக்கிற பாவியாகிறுன். நபிகள் நாயகம் அவர்களுடைய சொல்லையும் செயலையும் தயர்ந்து நடந்து வருவது முஸ்லீம்கள் எல்லோர்பேரிலும் நீங்காத வாஜிபாக விருக்கும். அவர்கள் கொண்டுவந்த பப்ளிக்கையாகிய ஷரீஅத்துக்கு மாற்றிலும் விரோதமாக அல்லாகுத்த ஆலாவினுல் படைக்கப்பட்ட யாவற்றும் அல்லாகுத்த ஆலாவுடைய அய்ன்தாக்தாகயிருக்கிறதென்று சொல்லுவதும் எண்ணுவதும்

முற்றிலும் அல்லாகுத்த ஆலாவுடைய சொல்லுக்கும் நபிநாயகத்தின் சொல்லுக்கும் விரோதமாகிய குபிராகயிருக்கும். நமது நபிநாயகம் நாம் எல்லோர்களுக்கும் கட்டளை செய்தபடி நபிநாயகத்தின் ஸஹாபாக்கள் மற்ற இமாம்கள் முந்திய காலத்திலுள்ள ஒலிமார்கள் எல்லோரும் தாவூததாயி முஹாசிபி சிர்றுஸிக்தி மஹ்ருபுல் கர்ஹீ ஜுனைதுல் பகுதாதி அபீநஜீபு ஷஹ்ரவர்த்தி செய்கு அப்துல்காதிரு ஜெய்லானி சாஹிபுல் அவாரிபுல் மஆரிபு அபுல்காசிமுல் குசைரியி முதலான குத்துபுகளும் ஒலிமார்களும் தவ்ஹீது மஅரிபா தரீகத்து ஹகீகத்து இந்த இல்முகளில் கரைகண்டு அமல்செய்துவந்த நாதாக்கள் எல்லாம் இந்த ஐந்து நேரத்துத் தொழுகையிலே ஒரு ஒகுத்து தொழுகையேனும் கலாவிடாமல் உபாத்தாகிறவரையிலும் தொழுது வந்தார்கள் என்பதில் சந்தேகமில்லை. இந்த நாயகமானவர்களுக்கு பிறகு மனம்போன போக்கில் நபுசுடைய இன்பசுகத்தை துயர்ந்து நடந்துகொள்கிறவர்களுக்குத் தொழுகைமுதலான ஏவல்விலக்கல்கள் தங்களுக்கு கஷ்டமாகயிருக்கிற நிமித்தம் தொழுகையை அடியோடுவிட்டவர்களும் தொழுகையை பிற்படுத்தியவர்களும் பெரும்பாவங்கள் முதலான துகளைச் செய்ய துவக்கி தங்களிஷ்டபடி மார்க்கத்துடைய ஹுக்குமுகளை கெடுக்க ஆரம்பித்தவர்கள் நரகத்தில் கடுமையான அதாபில் ஆகிவிடுவார்கள். அப்படிக்கு வருமல் நம் எல்லோரையும் அல்லாகுத்த ஆலா காப்பாத்துவானாகவும். ஆமீன்.

தொழுகையானது அல்லாவுடன் பேசிக்கொள்வதற்காகவும் அல்லாவை தெரிசித்துக்கொள்வதற்காவும் அல்லா அருள்புரிவதற்காகவும் அல்லாவை ஒன்றுபடுத்தி வணங்க துறவுகோலாகயிருக்கிற நிமித்தம் நபிநாயகத்தின் காலமுதல் கியாமநாள் முடிவுவரையிலும் பருலாக்கப்பட்ட ஐந்துநேரத் தொழுகையை ஒருவரும் இன்காருசெய்யாமலும் தடுர்காமலும் எல்லோரும் ஒப்புக்

கொண்டு நடந்துவரப்பட்ட தொழுகையாகயிருக்கிறது. குர்ஆன் மஜீதினாலும் ஹதீது ஷரீபினாலும் இந்த தொழுகை பருலென்றும் கடமையென்றும் தரிப்பட்ட பிறகு மேற்சொல்லிய நாதாக்கள் பெரியோர்கள் எல்லாம் இந்தத் தொழுகையை புறக்கணிக்காமல் எல்லோரும் ஒப்புக்கொண்டு அமல்செய்து வந்தார்களென்பதில் சந்தேகமில்லை.

3. ஆதம் அலைஹிஸ்ஸலாமுதல் ஈசா அலைஹிஸ்ஸலாம் வரையிலுள்ள ஒவ்வொரு நபிமார்களும் நபிகணாயகமும் அவர்களைப் பின்பற்றின இமாம்கள் சூபீன்கள் ஒலிமார்கள் குத்புகள் எவர்களும் இந்த லாஹிரானதொழுகையை தொழுகப்படாதென்றும் இந்த தொழுகையல்லாமல் ரகசியமான தொழுகை வேறேயிருக்கிறதென்றும் அல்லது வேறே ரகசியமான அமல் யிருக்கிறதென்றும் அப்படி ரகசியமான அமல் செய்கிறதில் நமக்கு அல்லாகுத்த ஆலாயிடத்தில் பலனிருக்கிறதென்றும் இந்தப் பப்ளிக்கையான தொழுகையில் நமக்கு யாதொரு பலனில்லையென்றும் சொல்லவில்லை. கிதாபுகளில் எழுதவுமில்லை என்பதில் சந்தேகமில்லை. செய்கு அப்துல் காதிரு ஜெய்லானி ஆண்டவர்களாவது குவாலிர்முகம்மதுகவுது ஆண்டவர்களாவது இபுனு அறபி நாயகமாவது ஹஜரத்து ஷாகுல் ஹமீது பாதுஷா நாயகம் ஆண்டவர்களாவது மற்றஎந்த ஒலிதாதுகள் செய்குமார்களாவது அவர்களின் முரீதுகளுக்கு இந்த ஐந்துநேரத்து தொழுகையை தொழுகாமல்விட்டுவிட்டு வேறே ரககியமான அமல் செய்துவரும்படி ஏவவுமில்லை. இப்போது நாம் தொழுகிற தொழுகையைத்தான் அவர்களும் தொழுது வந்தார்கள். இந்த பெரியோர்களும் மேற்கண்ட இமாம்களும் இந்த வெளிபரங்கமான ஐந்து ஒகுத்து தொழுகையை இன்காரு செய்யவுமில்லை. எங்கள் பேரில் கடமை அல்லவென்று சொல்லவுமில்லை. இந்த தொழுகையல்லாமல் ரகசியத்தில் வேறே தொழுகையிருக்கிறதென்றும் இந

ற்குப் பதிலாக அல்லாவுக்கு ரகசியமான அமல் செய்தால் போதுமென்று ஒருவரும் சொல்லவில்லை என்று ஒவ்வொரு முஸ்லீமும் உறுதிக்கொள்ள வேண்டியது கடமை.

4. ஐந்து நேரத்தொழுகையும் பருலு அல்லவென்று சொன்னாலும் அந்தத் தொழுகையிலுள்ள றெகஅத்துகள் 2, 3, 4, இந்த றெகஅத்துகளையாவது நிலை, ருகூஹு, சுஜூது, இருப்பு, சலாம், இவைகளுள்ள இந்தத்தொழுகையை நபிநாயகம் தொழுதுவரவில்லையென்றும் இதுகளில் எதையாவது பருலு அல்லவென்றும் இன்காரு செய்தாலும் அல்லத்கட்டினாலும் பப்ளிக்கை ஷரஹான நபிநாயகத்தின் மார்க்கத்தில் உள்ள ஐந்து நேரத்து தொழுகை நோம்பு ஜக்காத்து ஹஜ்ஜு இவைகளைவிட்டுவிடு இதில் காரியமில்லை ரகசியமான அமல் செய்கிறதில் நன்மையும் பலனுமிருக்கிறதென்று சொன்னாலும் எண்ணினாலும் அல்லது தொழுகிறவர்களை பரிகாசம் பண்ணினாலும் எண்ணினாலும் உடனே இஸ்லாமை விட்டு நீங்கினவர்கள் கூட்டத்தில் சேர்ந்த கடுமையான காபிருகிவிடுவான் என்று ஷரஹுஷபாவிலும் ஹதீகத்து நதியாவிலும் இஃலாம் ஷரஹு பிகுஹுல் அக்பர் முதலான பிரபல்யமான அறபி கிரந்தங்கள் தெளிவாக கூறுகிறது.

ஒரு அடியான் தகுந்த பிராயமும் புத்தியுமுள்ளவனாக இருக்கும் காலமெல்லாம் அவன் பேரிலே கடமையாக்கப்பட்ட தொழுகை முதலிய பகிரங்கமான அமல்களானது மரணமடைகிறவரையிலும் அந்த அடிமையைவிட்டும் அறவே விழுந்துபோகாதென்று லாஹிரு பாத்தினுடைய ஞானத்தில் தீர்மானம்பெற்ற சுன்னத்து ஜமாஅத்துடைய இமாம்கள் ஒற்றுவோர்மித்து சொல்லிவிட்டார்கள். இதற்கு விரோதமாக ஒரு அடிமையானவன் அல்லாவுடைய முகப்பத்தில் தீர்மானம் பெற்று அவனுடைய கல்பு தெளிவு

பெற்றவனுகவும் உண்மையில் ஈமானை தெரிந்து கொண்டு குபிரை விட்டு விட்டவனுக யிருக்கும் பட்சத்தில் மார்க்ககட்டளையிலுள்ள ஏவல் விலகல் அவன் பேரிலுள்ள ஹுக்குமுகள் விழுந்து விட்டதென்றும் அவன் எந்த பெரும் பாவத்தை செய்தபோதிலும் அவனை அல்லாகுத்த ஆலா நரகம் புகுத்திவைக்க மாட்டான் என்றும் இபாஹிய்யாக்கள் சொல்லுகிருர்கள். சிலர் மேற்கண்ட லெட்சணத்திலுள்ள அடிமையைவிட்டும் யேவல்விலகல் விழுந்துபோகிறதுடன் இவனுக்கு கடமையாக்கப்பட்ட வெளியரங்கமான வணக்கங்கள் அவனைவிட்டும் விழுந்து விடுமென்றும் அந்த வணக்கமானது கல்புக்குள்ளாலே ரகசியமாக அல்லாவை நினைத்துக்கொண்டு இருக்கிற இரகசியமான அமலாகிவிடுமென்றும் இப்படி சொல்லுகிற கூட்டத்தார்கள் பப்ளிக்கை வழிக்கேட்டிலாகி இஸ்லாமார்க்கத்திற்கு முற்றிலும் விரோதமாகி காபிராகிவிடுவதில் சந்தேகமில்லை. கல்புடைய தெளிவைக்கொண்டு அல்லாவை அறிகிறதிலும் அல்லாகுத்த ஆலாவின்பேரில் உகப்பு வைத்திருப்பதிலும் நிறப்பமான தீர்மானம் பெற்றவர்கள் நபிமார்கள் அதிலும் அதிகத் தீர்மானமானவர்கள் நமது நபிகளுயகம் அவர்களாக இருக்கிருர்கள் என்பதில் சந்தேகமில்லை. அவர்கள் எல்லோருக்கும் மரணமடைகிற வரையிலும் ஏவல் விலகல் விழுந்து போகவுமில்லை. வெளியரங்கமாகிய வணக்கங்கள் ஆகிய தொழுகை நோம்பு முதலான வணக்கங்கள் அவர்களைவிட்டு நீங்கவுமில்லை அல்லாகுத்த ஆலாவுடைய கட்டளை நபிஷயகத்தின் ஹக்கில் கடுமையாக ஆகிவிட்டது. அதாவது அவர்கள் உபாத்தாகிறவரையிலும் அல்லாகுத்த ஆலாவுக்கு நேமமீாக தொழுகை முதலான வணக்கங்களை தவருமல் கொண்டுவர வேணுமென்று கடுமையாக நாயன் ஏவியிருக்கிருன். இந்தப்படி அகாயிது நசபிலும்ஷரஹுசிபாவிலும் தெளிவாக கூறுகிறது. அல்லாகுத்த ஆலா நம் அனைவர்களையும் சுன்னத்து ஜமாஅத்து அகீதாவுக்கும் அமலுக்கும் விரோதமில்லாமல்

ஷி கூட்டத்தைத் துயர்ந்து ஐந்து ஒருத்து பப் ளிக்கையான இந்த சிறப்பான தொழுகையை இமாம் ஜமா அத்துடன் தவராமல் தொழுதுவந்த வசூலான சாலிகான கூட்டத்தில் நம்மனைவர்களையும் சேர்த்து வைக்கிறதுடன் கியாமத்தில் அல்லாகுத்த ஆலாவின் சமுகம் நாம் எல்லோரும் ஹாஜராகி நாங்கள் வெளி யரங்கத்திலும் உள்ரெங்கத்திலும் இந்தஐந்து நேரத்து தொழுகையை இமாம் ஜமா அத்துடன் தொழுது வந்த உம்மத்தில் உள்ளவர்கள் என்று அல்லாவின் சமுகத்தில் விண்ணப்பம் செய்து அதை அவன் ஒப்புக்கொண்டு எப்பொழுதும் மாருத சிதேவிதனத் தில் நம்மனைவர்களையும் தரிபாடாக்கி வைப்பானுகவும். ஆமீன்.

இங்ஙனம்

காலி அஸ்ஸெய்யது றஹ்மத்துல்லா சாஹிபு
அல்காதிரிய்யி.

## இந்தக் கிதாபை பார்வையிட்டு சரியெனக் கையொப்பமிட்ட உலமாக்களின் நாமங்கள்.

—

முஹம்மது மூசா பின் முகம்மது ஈசா.

காதிமுஷ் ஷரீஅத்தி அஹ்மது இபுராஹீம் பின்
ஹாஜில் ஹரமைனிஷ்ஷரீபைனி
அஸ்ஸூல்த்தான் சாஹிபு அல்காதிரிய்யி
அபா அன்ஹூ வஅஸ்லாபிஹி.

அல்ஹாஜி குலாம் தஸ்தகீர் சாஹிபு பின்
முகம்மது கௌது கானல்லாஹூ லகுமா.

முகம்மது அப்துல் காதிறு அல்காதிரியி வஷத்தாரியி.

அகஸ்தியர் பிரஸ், பெரியகடைத்தெரு, நாகபட்டணம்.